உ

குகமயம்

# பித்துக்குளி
# ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள்
அவர்களின்
# பக்திப்பாடல்கள்

வெளியீடு:-
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

30–6–1967) (விலை சதம் 50

இரண்டாம் பதிப்பு

அச்சுவேலை: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி

# முன்னுரை

பக்திப்பாடல் வரிசையிலே பித்துக்குளி முருக தாஸ் சுவாமிகள் முதல்வரிசையிலே நிற்கிறார் என்றால் அது மிகைப்படுத்திச் சொல்வதன்று. இறைவனோடு தானும் இசைந்து மற்றையவர்களையும் இசையச் செய்வதே சுவாமிகளின் பாடல் சிறப்பாகும். தான் வேறு பாட்டு வேறு என்றில்லாமல் இசை வேறு பாட்டு வேறு என்றில்லாமல் பாடுபவர் வேறு கேட்பவர் வேறு என்றில்லாமல் எல்லாரும் ஒன்றுவதே அவரது இசையின் சிறப்பாகும்.

நமது திருமுறை ஆசிரியர்களும் பின்வந்த அருளாளர்களும் இறைவனை எவ்வாறு பாடினார்களோ அதே மாதிரி இறைவனைப் பாட விரும்பினார். இறைவனைப் பாடுவதைத் தவிர அவருக்கு வேறு வேலையே இல்லை. சுவாமிகள் தம்மையும் மறந்து இறைவன் புகழை இசைப்பதில் ஈடுபட்டிருக்கும் போது சில பாடல்கள் அந்த நேரத்திலேயே எங்கிருந்தோ உதித்துக் கொண்டிருக்கும். சுவாமிகள் பாடாமலிருக்க முடியாமல் பாடிய பாடல்களை மற்றைய அன்பர்களும் படித்து இன்புறுவதையே நோக்கமாகக் கொண்டு சுவாமிகளின் பாடல்களைப் புத்தக உருவில் கொண்டு வருவதற்கு எமக்குக் கிடைத்த பாக்கியத்தையிட்டு மிக மகிழ்கின்றோம்.

சுவாமிகளுடைய பாடல்கள் இறைவனோடு பேசுவதாக அமைந்தவை. தந்தையிடத்துத் தனயன் பேசுவது போலவும், கணவனிடத்து மனைவி பேசுவது போலவும், ஆண்டானிடத்து அடிமை பேசுவது போலவும், தோழனிடத்துத் தோழன் பேசுவதுபோலவும் அமைந்தவை. எந்த எந்த நிலைகளில் இருந்து இறைவனோடு தொடர்பு கொள்ள முடியுமோ அந்தந்த நிலைகளில் இருந்தெல்லாம் இறைவனோடு தொடர்பு கொள்ளச் செய்கிறார். சுவா

மிகளுடைய பாடல்களில் பக்திரசம் சொட்டுகின்றது. சமத்துவம் சமரசம் வெள்ளிடைமலைபோல் விளங்கு கின்றன. மக்களுடைய அறியாமை இருளை ஓட்டும் ஞானச் சுடராக விளங்குகின்றன.

சுவாமிகள் மீண்டும் எம்மிடையே தெய்வ உணர்வை ஊட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கத் தோடு வந்துள்ளார். அவ்வெண்ணம் நிறைவேறு மென்றே சொல்லலாம். சுவாமிகளின் நிகழ்ச்சிகள் வைக்கப்படும் இடமெல்லாம் சாதி சமய பேதமின்றி அதிகமாகக் கூடி இசை வெள்ளத்துள் அமிழ்ந்து விடுவோம். சுவாமிகள் ஆண்டவன் புகழைப் பாடப் பாட மெய்மறந்து நாமும் பாடுவோம்.

நாம் அனுபவிக்கும் இன்பம் ஒருநாளோடு அழிந்து போகாமல் தொடர்பாக மேலும் மேலும் அனுபவிக்க வேண்டும் என்ற ஒரு எண்ணமே இப் புத்தக உருவானது. பித்துக்குளியின் பக்தர் கள் இப் பாடல்களைப் படித்துப் பயன் பெறுவார்க ளாக.

ஆத்மஜோதி சமய சேவையினர்,
நாவலப்பிட்டி.
30-6-67.

உ
குகமயம்

பித்துக்குளி

# ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகளின்

## நித்திய நாமாவளி பஜனை

---

ஓம் குருநாதா ஸ்ரீ குருநாதா -
சற்குருநாதா சச்சிதானந்தா ஓம்
தீனநாதா தீனபந்து
திவ்யஸ்வரூபா ஜெயகுருநாதா
அனாதநாதா ஆனந்தரூபா
அற்புதரூபா ஸ்ரீகுருநாதா
சிவகுருநாதா ஸ்வாமிநாதா
ஷண்முகநாதா ஓம்குருநாதா

ஜெய் சற்குருநாத மஹராஜ்கி ஜெய்.

ஜெயகணேச ஜெயகணேச ஜெயகணேச ஓடிவா
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஆடிவா
ஜெயகணேச மங்களங்கள் தங்கிடவே ஓடிவா
ஸ்ரீகணேச மாண்புடனே நாங்கள் வாழ ஆடிவா
ஜெயகணேச அன்புநிலை தங்கிடவே ஓடிவா
ஸ்ரீகணேச இன்பநிலை ஓங்கிடவே ஆடிவா
ஜெயகணேச நெஞ்சக்கனகல் நெகிழ்ந்திடவேஓடிவா
ஸ்ரீகணேச வஞ்சப் பகைகள் நீங்கிடவே ஆடிவா.

ஜெய் சித்திவிநாயக ஸ்வாமிகி ஜெய்.

அம்மா தாயே கலைவாணி
நீஎன் நாவை காப்பாயே
இம்மா நிலத்தின் இனிமைஎல்லாம்
இருக்குது நாவின் அசைவினிலே (அ)

சும்மா இருக்கத் தெரியாது
சுகத்தைச் சொன்னால் விளங்காது
தம்மால்என்றே தடுமாறும் இந்தத்
தரணியை ஆண்டிட வேண்டுமடி (ஓ)

ஜெய் தமிழ்க் கலைவாணிகி ஜெய்.

தில்லை ஆட்டக்காரி - நீ செய்யடி - ஓர் மாயம்
எல்லையற்ற இன்பம்-இங்கு-யாவருக்கும்வேண்டும்
கல்லொத்தமனமே-உருகி-கானம்-பொழியவேண்டும்
இல்லை என்றசொல்லே-இங்கு-இல்லையாகவேண்டும்
சொல்லை யினிமையாக்கி-வாழ்வை - தூயகீதமாக்கி
அல்லபகலைநினையா-நெஞ்சம்-அமுதமயமேயாக்கு!
வில்லிடத்தை அஞ்சா-உணர்வில்-வீரசாந்தமூட்டு
முல்லைகமலம்போலே-உனக்குமுழுதுமுரிமையாக்கு
கல்லைப்போலஉறுதி-நல்லகனிமரம்போற்பொறுமை
புல்லைப்போல பணிவு-நல்ல-நாயைப்போல நன்றி
வல்லமனிதத்தன்மை-ஐந்தும்-வாய்த்திடல்வேண்டு
தில்லை யாட்டக்காரி -நீ- செய்யடி ஓர்மாயம் (மடி

அம்மா அம்மா அம்மா
அம்மா அம்மா அம்மா
இம்மா நிலத்தில் எல்லாம்
இயங்குதடி யுன் ஆடலினால் ஓ - அம்மா

ஜெய ஆதிபரா சக்திகி ஜெய்.

| | | |
|---|---|---|
| அன்பருக்கு அன்பனே நீ | வா வா | முருகா |
| ஆறுபடை வீடுடையாய் | ,, | ,, |
| இன்பமய ஜோதியே | ,, | ,, |
| ஈசனுமை பாலகனே | ,, | ,, |
| உரகநாபன் மருகனே நீ | ,, | ,, |
| ஊமைக்கருள் புரிந்தவனே | ,, | ,, |

எட்டுக்குடி வேலவனே வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ ,, ,,
ஐங்கரனுக் கிளையவனே ,, ,,
அகில லோக நாயகனே ,, ,,
ஒய்யாரி வள்ளி லோலா ,, ,,
ஓங்கார தத்துவமே ,, ,,
ஔவைக் குபதேசித்தவா ,, ,,
அகில லோக நாயகனே ,, ,,

கந்தஸ் வாமியே எங்கள் சொந்த சாமியே
கந்த நாதனே எங்கள் சொந்த நாதனே

கார்த்திகேயா கலியுக வரதா
கந்தா முருகா கருணாகரனே

கதிர்காம கந்தனே வா முருகையா
காலர்காலன் பாலனே வா ,,
சதிர்ஆடும் மயிலானே வா ,,
சங்கீத பிரியனே வா ,, (கதிர்)

சொல்லுக்குச் சொல்லினிக்கும் முருகையா-உன்றன்
சுந்தர நாம கீதம் முருகையா
அல்லும் பகலும் சொல்வேன் முருகையா -என்னை
ஆண்டவன் நீயல்லவோ முருகையா (கதிர்)

வேத வேதாந்த ரூபா முருகையா-உன்றன்
வேலும் மயிலும் துணை முருகையா
பாத மலர்க் கடிமை முருகையா - என்னை
பக்தனாய் பாட வைப்பாய் முருகையா (கதிர்)

எண்ஜாண் உடம்பினுள்ளே முருகையா-என்னில்
எத்தனை எண்ணம் வைத்தாய் முருகையா
பண்ணுடன் பாடவேண்டும் முருகையா- அருளால்
பாவங்கள் துலைய வேண்டும் முருகையா (கதிர்)

அகந்தையை மாற்றி நெஞ்சில் முருகையா-நீ
அன்புடன் தங்கவேண்டும் முருகையா
முகமலா தனைக்காட்டு முருகையா -உன்னை
முக்காலும் நம்பினேன் முருகையா (கதிர்)

## கந்தனென் காதலன்

கந்தனென்ற பெயரானிடம்
காதல் கொண்டேன் தோழி
காரணனுலகுக் கெல்லாம் கதிர்காமன் தோழி-
அவன் கதிர்வேலன் தோழி

எந்தனுள்ளம் கொள்ளைகொண்ட -
கள்வனடி தோழி
எல்லாவற்றிலும் நிறைந்த
காந்தனடி தோழி

தானென்றகந்தை கொண்டால் —
தாளானடி தோழி
தக்ஷணமதை யழித்து -
ரெக்ஷிப்பானடி தோழி

தன்னந்தனி யானவர்க்கு -
துணையாவான் தோழி
தன்னையற மறந்தாரையும் -
தான் மறவான் தோழி

நானற் றுருள்ளங் கோவில் -
கொண்டவண்டி தோழி
நல்லதெல்லாம் தன்னிடத்தே -
கொண்டவண்டி தோழி

தேனொத்த பண்ணிசையில் -
தேர்ந்தவண்டி தோழி
திக்கி அன்பாய்ப் பாடினாலும் -
திருப்தி கொள்வான் தோழி

தேவாதி தேவர் தொழும் -
தெய்வமடி தோழி
தெய்வயானை தழுவுமெந்தன் -
தெய்வமடி தோழி

பன்னிருகைக் கொண்டன்பர் -
பயமழிப்பான் தோழி
தன்னிலையை தந்தன்பரை -
தாங்கிடுவான் தோழி

கல்லெனச்சிலம் பொலிக்க -
வருவானடி தோழி
கல்நெஞ்சை யுருக்குமவன் -
வேலினொளி தோழி

அன்பருள்ளங்குளிர ஆடும் -
மயிலானடி தோழி
இன்பம் வரக்கூவுமவன் -
சேவற்கொடி தோழி

அகன்ற மார்பில் கடம்புகண்டால் -
ஆசை வளரும் தோழி
புகன்ற சொல்லில் வேதமணம் -
வீசுமடி தோழி

ஆறுமுகப் புன்சிரிப்பைக் -
கண்டுவிட்டால் தோழி
ஆஹா அதுவே சத்திய —
இன்பமடி தோழி

என்ன வென்று சொல்வேனடி -
என் முருகன் பெருமை
இன்பமாக ஹர ஹரா —
வென்ருடிடுவோம் தோழி

உருகி முருகா என்பவர்முன் -
ஓடிவருவான் தோழி
வருக! வருக!! என்றவனை -
வாழ்த்திடுவோம் தோழி

ஆதிபராசக்தி பாலன் -
அழகன் கதிர் காமன்
அவனை யணைத்தின்பமுற -
ஓடி வாடி தோழி.

பூர்விசாமா கண்ணிகள் ஆதி

அவனி என்பதோர் பூந்தோட்டம் - இதில்
அன்பற் ருர்க்கே திண்டாட்டம் - உள்ள
அன்பு கொண்டார்க்கே கொண்டாட்டம் -
இதை அறிவாயே

கவனிப் பதற்கோர் ஆளுண்டு - இங்குக்
காட்சிக் குகந்த பொருளுண்டு - இதில்
கைவைத் தாலவ னடியுண்டு - இதை மறவாதே.

மருந்துக் குகந்த இலையுண்டு — பெரும்
விருந்துக் கேற்ற கனியுண்டு — கொடும்
பருந்துக்கு மாங்கே மரமுண்டு—என்ப துணர்வாயே

சதிருக் கேற்றதோ ரிடமுண்டு - இன்பச்
சதியருக் கேற்ற மறைவுண்டு - கெட்ட
விதியருக் கேற்ற புதருண்டு - குறை குறியாதே.

நல்லவர்போகப் பாதையுண்டு - கலை
வல்லவ ராடிட மேடையுண்டு - குறை
யில்லா இனிய கானமுண்டு - கண்டு மகிழாதே

பலவிதங் கண்டு திகையாதே - இதில்
பலவகை யுண்டு பகையாதே - உன்னைக்
கலக்கு மனத்தை மதியாதே - அவ னிடம்நாடில்

உனக்கு வேண்டுவது யாதென்பான் - நீ
எனக்கு வேண்டாமை தாவென்பாய் - அவன்
தனக்கு முனக்கும் பேதமில்லாப்-பெரும்பதமீவான்

ஆனந்த மானந்த மிதுவேகாண் - அவன்
ஆதி பராசக்தி பாலன்காண் - உண்மை
யான தலைவன் முருகன்காண் - அவன் புகழ் சொல்
வோம்.

நீல மயிலேறுங் கோல முருகனை
நித்தம் பணிந்திட வாருங்கடி
கால கால னெந்தை ஆலமுண்டார் கொஞ்சும்
கந்தனைப் பாடிட வாருங்கடி
சூலி சிவகாமி தாவி முத்தமிடும்
சுந்தர பாலனைப் பாருங்கடி
காலில் சிலம்பொலி கல்கலென வரும்
கந்தன ழகினைப் பாருங்கடி
சின்ன முனிவர்க்கு செந்தமிழ் அமுதை
அன்புடன் பருகத் தந்தவண்டி
வன்ன மயிலேறும் வள்ளலை வாழ்த்தினல்
வந்தின்பம் தருவான் பாடுங்கடி
வேலுடன் வந்தன்பர் வேதனை தீர்த்தின்பம்
வேண்ட வேண்டத்தரும் மெய்யனடி
நாலு வேதப் பொருள் ஆறு சமயத்து
நாயகன் எம்முயிர் அய்யனடி

ஓலமிட்ட சுரர் காலனூர் புக்கிட
ஒய்யாரப் போர் செய்யும் வீரனடி
சீல மெல்லாந்தந்து தேவர்கள் நாட்டிற்கு
சேனுதிபதியான தீரனடி
கால நிலைகளை கருதா தன்பர்க்கு
கருணை பொழியுங் கந்தனடி
பால வடிவனென் பதி கதிர்காமன்
பக்தர்களுக் கென்றும் சொந்தனடி.

வேலனெம் பெருமாள்

அடியார்க்கு நல்ல பெருமானே - எனை
ஆண்டிட நீ ஓடிவா
ஓடிவா அப்பா ஓடிவாநீ
ஓடிவா முருகா ஓடிவா

முடியா முதலே பெருமானே - எனை
முற்றிலு மாண்டிட ஓடிவா
வடிவேலரசப் பெருமானே - உனை
வணங்கினேன் ஆண்டிட ஓடிவா

புள்ளி மயிலேறும் பெருமானே - எனை
புனிதனுக்கிட ஓடிவா
அள்ளிப் பருகும் பெருமானே - எந்தன்
ஆனந்தத் தேனே ஓடிவா

வள்ளிக் காந்தப் பெருமானே - உனை
வணங்கினே னாண்டிட ஓடிவா
துள்ளியோடும் எண்ண மோயவே - அப்பா
துதித்தே னணைத்திட ஓடிவா

உள்ளம் கவரும் பெருமானே - உனை
உருகியணைத்திட ஓடிவா
கள்ளம் நிறைந்த பெருமானே - உனை
கருணையனென்று நம்பினேன்

பொங்கும் அன்பே பெருமாளே - இந்தப்
புவியாய் நின்ற பெருமாளே
மங்களமான பெருமாளே - இந்த
மனமாயை ஒடுங்க ஓடிவா

பித்தன் பெற்ற பெருமாளே - என்
சித்த மிசைநிறை தேவனே
அத்திக் கிளைய பெருமாளே - அன்பு
முத்துக் குமார நாதனே

சங்கரி பாலப் பெருமாளே - அன்பர்
சங்கடந் தீர்க்க ஓடிவா
சங்கரி மருகப் பெருமாளே - எங்கும்
மங்களம் பொங்க ஓடிவா

கல்நெஞ்சம் உருக்கும் பெருமாளே - சிறு
கால்சிலம் பொலிக்க ஓடிவா
தில்லைகுருவின் பெருமாளே - என்முன்
தித்தோம் தித்தோம் என்றுடிவா

ஓங்காரரூப பெருமாளே - உனை
ஒவ்வொன்றிலும் காட்டி ஓடிவா
சிங்காரரூப பெருமாளே - அன்பர்
சிந்தை வாசனே ஓடிவா

நிராமய நிர்மலப் பெருமாளே — உண்மை
நித்தியானந்தா ஓடிவா
பராசக்தி பாலப் பெருமாளே - என்
நிரந்தர மாயாணுய் ஓடிவா

கதிர் வேலழகா பெருமாளே - என்
கண்மணி கதிர்காமப் பெருமாளே
சுகிர்தா அன்பர் பெருமாளே - நீ
சுகமாய் வாழ்வாய் ஓடிவா.

## ஓம்

ஓம் ஓம் ஓம் ஓம் ஓமென் ருெலிக்குது
ஓம் ஓம் ஓம் ஓம் ஓமென் ருெலிக்குது

ஆமோதித்துக் கடலலே நம்மைக் கூவியழைக்குது
ஓமென்ருெலித்துக்காற்றுநம்மைத்தழுவியணைக்குது

நீலவானம் நிர்மலமான நிலையைக் குறிக்குது
நாதன்கருணை பொதுவென மழையை மேகம்
பொழியுது

மலைகளில் நதிகள் ஓடிவரும்ஒலி மனத்தைஇழுக்குது
குலைகுலையாகக் கனியுள்ள கொடிகள் கும்பிட்ட
ழைக்குது

சலசலவெனவே மரங்களிலைகள் சப்தித் தழைக்குது
பலவிதபூக்கள் பூத்துநாசியைப் பரிமளித்தழைக்குது

பறவையினங்கள் கூவிக்கூவிப் பரிவுட னழைக்குது
பச்சைவர்ணப்புற்றரைபடுத்துப் பாயாய்க்கிடக்குது

கறக்கக்கறக்கப்பால்தரும்பசுவும் கனிவுடன்வருகுது
இறக்காமலே வாழச் சாந்தி இங்கே யிருக்குது

மறக்காமலே கருணையில் வாழும் முனிவரு மிங்குள்
ளார்
சிறக்கவேயவர் கவிகள் புனைந்துகளிக்க அழைக்கிருர்

திறமையா யிவைகளைத் தந்த இயற்கைத் தேவி
யைப் பணிந்திடுவோம்
பராசக்திஓம் பராசக்திஎனப்பாடிக் குதித்திடுவோம்

மாண்டு எடுப்பு ஆதி

வேல்முருகா மால்மருகா வாவா ஷண்முகா
கால்பிடித்தேன் காத்தருள வாவாஷண்முகா (வேல்

கண்ணிகள்

நால்வேதப் பொருளானாய் நாதா ஷண்முகா
நலமெல்லாமுன்பால் கொண்டாய் நாதாஷண்முகா
செல்லமாகச் சிலைஅணைக்கும் சேயே ஷண்முகா
செங்கதிர்வேல் தாங்கிய என்தேவே ஷண்முகா
(வேல்

ஆறுபடை வீடுடைய ஆண்டவா ஷண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா ஷண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா ஷண்முகா
சிங்கார ஓங்கார சீலா ஷண்முகா (வேல்

நாறுமாலை அணிமார்பா நாயகா ஷண்முகா
நாலுவேத நாதகீத நாயகா ஷண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே ஷண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே ஷண்முகா
(வேல்

பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா ஷண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முக்தனே ஷண்முகா
ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா ஷண்முகா
அடியாருள்ளக்குகையமர்ந்த ஆனந்தா ஷண்முகா
(வேல்

வீடும்நாடும்நின் திருத்தாள்வேண்டினேன்ஷண்முகா
வீரன்சூரன் உடல்கிழித்த வேலனே ஷண்முகா
ஓடும்மனம் உன்னைநாட ஆடிவா ஷண்முகா
ஒருவனேயென் வினையழித்த உத்தமா ஷண்முகா
(வேல்

எல்லேயில்லா ஆனந்தனே ஏகாந்தா ஷண்முகா
எங்கும்நிறை அன்புருவே ஏமுருகா ஷண்முகா
தில்லேயிலே ஆடும்தேவன் பாலகா ஷண்முகா
திருட்டுத் தனமாய்க் குறக்கொடியைக் கொண்
டவா (வேல்

தொல்லேயெல்லாங் கடந்தபதம் தந்திடுவாய் ஷண்
முகா
தோத்தரித்தோம் எங்கள்முன்னே வந்திடாய்
ஷண்முகா
கல்லேயொத்த மனமுருகக் கருணைசெய் ஷண்முகா
கல்லெனச்சிலம்பொலிக்க ஓடிவாஷண்முகா (வேல்

பைரவி எடுப்பு ஆதி

வாராயோ என்றன் முன்னே வடிவேலனே (வா

கண்ணிகள்

ஓராறு சிரங்களில் உயர்ந்த கிரீடம் மின்ன
ஈராறு காதினில் குண்டலங்கள் குலுங்கிட
சூராதி சூரர்குலம் வேரற வேல்விடுத்த
தீரா வானவர்புகழ் வேதாந்த சீலனே (வா

சீரான பக்தியுடன் செப்பும் தொண் டர்க்கருள
நேராக மயில்மிசை ஏறி வரும்பாலா
பாராதி அண்டமெல்லாம் பணியும் சக்திவடிவே
பராபரனே ஞானபண்டிதகு காமுருகா (வா

தீராயோ என்றன்கலி காவாயோ கந்தநாதா
தாராயோ உன்னுடைய தரிசனம் கண்குளிர
ஆரவா ரமுடனே காவடிகள் பாடியாட
ஆனந்த முடனே இடும்பன் கடம்பனுடன் (வா

சக்திவேல் கைப்பிடித்த பாலசுப்ர மண்யனே
முக்தி யிதைஇந்த அநித்திய னுக்கருளப்
பக்தி யறியாத பாவியே னென்றனுக்குன்
உத்தர மதைத்தா ஒய்யார மாகவே (வா

ஆனந்தமான அலங்கார முடனே
ஆடும் மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்த மான ஜோதிஸ்வ ரூபனே (வா

## கும்மி

முருகா முருகா முருகா முருகா
முருகா என்றுநாம் பாடிடுவோம்
முருகா முருகா முருகா என்று
பராசக்தி தன்னருள் கூடிடுவோம் (முருகா

சுருக்க மாகவே மூன்றெழுத் துள்ள
சுத்தப் பிரம்மமான நாமமிதே
கருத்துருகிப் பாடிக்கொண் டாடிக்
களித்திடு வோம்என்று வந்திடுவாய் (முருகா

தேனினு மினிய தெவிட்டாத நாமம்
தேவாதி தேவர்போற்றும் நாமம்
ஞானிக் குபதேசம் செய்த நாமமிது
நம்பன் சரவணபவன் நாமம் (முருகா

அருண கிரியார் அகமகிழ்ந்து பாடி
ஆடித் துதித்த நாமமிதே
திருவருள் புரிந்து எளியார் நம்மைத்
தேற்றுவிக்க வந்தஜோதி நாமம் (முருகா

துஷ்டரை ஸம்ஹாரம் செய்த நாமமிது
அஷ்டதிக் கினையும் ஆண்டநாமம்

இஷ்டரைக் காக்க உதித்த நாமமிது
எங்கும் விளங்கும் ஜோதி நாமம் (முருகா

வேருன மார்க்கத்தில் செல்கின்ற நீ
மெய்ஞ்ஞான வழியறி யாததேனே
மாருத பக்தி யுடனே மனமே
வந்திடு வாய்உயர் வெய்திடுவாய் (முருகா

கருக்கு ழியில் வீழ்ந்து தவிக்கும்
கடையனுய் இனி இருக்காமல்
உருவின்றி மறு பிறப்பை யழிக்கும்
உத்தமன் நாமமி தறிந்திடுவாய் (முருகா

வருத்த மின்றிப் பஜித்திடலாம் கந்தன்
கருத்துருகிடச் செய்திடலாம்
திருத்தி அடங்கிச் சீக்கிரம் வருவாய்
சிவனுர் பாலனைக் கூடிடுவோம் (முருகா

கற்றிருந் தென்ன கருத்திருந் தென்ன
கந்தனை அறியாத அன்னவர்க்குப்
பற்றுத லற்றது பாரினில் எல்லாம்
பஜனை புரிவாய் கந்தனையே

பகையழி வேற்குகன் பாத மலர்தன்னைப்
பற்றின வர்தம் பாவமெல்லாம்
பகலவ னைக்கண்ட பனிபோ லது
பறந்திடு மென்ப தறிவாயே (முருகா

உருகிப் பாடுவார்க் குடனே அருள
உள்ளங் குளிர்ந்தவ னேவருவான்
வருக வருக முருகா வென்று
வணங்கிப் பணிந்திடு வோமே (முருகா

ஆனந்த மாகவே ஆடி வரும்கந்தன்
அழகைப் பார்த்து மகிழ்வோமே
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்த மானந்தம்
ஆனந்த மென்று கூத்தாடிடுவோம்.

## நாமாவளி

செந்தில் வாழ் முருகா-திரு-சிங்கார வேலவா
பாலா வா வா
சிந்தை நின்றிட வா-சிவகாமி மகிழ் திரு
நடன குகா வா
சந்த தாளத்துடன் தக—தீம் ஜெம் ஜெம் தக
தொ மெனவே
சிந்தை குளிர்ந்திடவே—இங்கு—தாண்டவமாடுவாய்
ஆண்டவனே வா.

## நாமாவளி

(காவடிச் சிந்து)

பழநி கிரிவாழ் முருகையா - பால்
பொங்கக் காவடி கொள்ளுமையா-என்றும்
அழகா அனந்தனேவா ஆண்டி வடிவான வடி
வேலா அருள் சீலா
தேசோ மய முனது காட்சி - அய்ய
தேக உயிர்க்கெல்லாம் நீயே சாக்ஷி-இங்கு
வாசாம கோசரமாக வாழ்த்தி நெக்குருகு - மன்பர்
நேசா ஈசர்க் கீசா

துள்ளியாடுங் காவடிகள் கோடி-உன்முன்
தோம் தளாங்குத் தோமென்றுடிப்பாடி-உடல்
கள்ளமின்றி காலமின்றி கனிவுடன் மறப்பதைக்
கண்டேன் அன்பு கொண்டேன்

தண்டங் கொண்ட கந்த குருநாதா-மூ
வண்டருங் கொண்டாடும் ஞானநாதா கண்டு
விண்டாரில்லை உன்மகிமை-தெண்டபாணித் தெய்
வாராய் உனைத் தாராய். வமே-நீ

## நாமாவளி

சுவாமிநாதா சற்குருநாதா
சர்வ காரணு ஷண்முகா தேவி பாலா
நாமரூப மில்லா இன்ப நாதவடிவே-அன்பர்
நாயக பன்னிருகையா முருகையா வா
வல்ல தேவா என்றும் நல்ல தேவா
வாத நோயில் சிக்கா சிவசக்தி வேலா
நானென்று எங்குமாய் நின்ற வடிவே
நல்லா ருளங் கோவில் கொள்ளும் நாதா, குருவே.

## பல்லவி

பாடப்பாட இனிக்குதே - நெஞ்சம்
பாகாய் நெகிழ்ந்துருகுதே - கந்தா உனைப் (பா

## அநுபல்லவி

கூட மனமும் துடிக்குதே - உன்
குறும்புத்தன மெண்ணி நகைக்குதே - மனம் (பா

## சரணம்

சிரமேற் கூப்பிக் கை வணங்குதே
சித்தத்தில் உன்னுருத் தெரியுதே
குறுகிய மனமலர் விரியுதே - உன்
குழந்தை வடிவமும் தோன்றுதே-கண்முன் (பா

கண்ட கண்கள் இனித் தூங்குமோ (கந்தா உன்
னைக்) என்
கவலை எல்லாம் இனி மாறுமோ
அண்ட சராசரமும் உனக்கிணையாகுமோ-உன்
அன்புக் கடைக்கண் எனை நோக்குமோ? (பா

என்நாவும் உன்நாமம் சொல்லுதே - என்
இதயமும் உன் கோயிலானதே
என்னுளும் புகழே செவி கேட்குதே - உன்
இன்ப மணம் நுகர்ந்து நாசி மகிழுதே. (பா

**கண்ணிகள்**

நீலமயில் வாகா வாவா, நீயே எனக்கின்பமப்பா
காலமெல்லாம் கானம்பாடி கந்தா என்ன
மறந்தே வாழ்ந்தேன்
ஓலமறை போற்றும் தேவா உண்மை அன்பில்
ஊறும் அமுதே
காலணிகள் கொஞ்ச வந்தாய் கருத்தினிலே சிரிக்
கும் அழகே
அள்ளி அணைத்து உச்சி மோந்து ஆசை தீர முத்
தம் தந்து
துள்ளி யோடும் உன்னைக்கண்டால் துஷ்டகுணமும்
மகிழ்ந்தே பாடும்
மெள்ள அன்பால் இறைவன் உள்ளம் இருந்தி
வாழ்ந்து இனிக்கப் பேசும்
கள்ளும் மயங்கும் உள்ளத்திலே கந்தா வுந்தன்
காட்சி கண்டால்.

**நாமாவளி**

ஓங்காரத்தின் ஒளியே ஓம்
உத்தர கிரியின் பதியே ஓம்

ஓதிய பூஜா பலமே ஓம்
மங்கள யந்திர மயமே ஓம்
நீங்கா அருள் வரம் தருவாயே
அடியேன் துதிசொல வருவாயே
நின் மந்திர உரு வேற்றிவிடுவேன்
நிலவுலகத்தை மாற்றிடுவேன்

ஏங்காப்பர நிலையுற வேண்டும்
எங்கும் அடியவர் எழவேண்டும்
என்னிடம் நீவழி சொல வேண்டும்
யாவரும் அவ்வழி செல வேண்டும்
தேங்கானந்த கடலே ஓம்
மாங்கனி யுணுமத கஜமே ஓம்
செல்வ விநாயக வில்வ விநாயக
ஸித்தி விநாயக ஓம்

ஹர ஹர சிவசிவ அம்பலவாணு
ஆனந்தத் தாண்டவா ஆண்டவா வா வா
கரங்குவித் துன்னை பாடினோம் வா வா
கந்தனி தாதாய் சுந்த்ர தேவா
பரவிடு மன்பர் பண்பே பரமா
பக்தியின் வித்தே முத்தியே முதலே
மறலியின் காலா மாதுமை லோலா
மாயா நேயா தூயா வா வா.

## சரஸ்வதி வணக்கம்

அன்பே சிவமாய் அணைப்பாள் நம்மை
அன்னை பராசக்தி
ஆறுதல் சொல்லி அமுதம் பொழிவாள்
அன்னை பராசக்தி
இப்புவி யின்பம் வேண்டா மென்பாள்
அன்னை பராசக்தி
ஈடில்லாத சாக்ஷியாய் நிற்பாள்
அன்னை பராசக்தி

உயர்வு தாழ்வு ஒன்றும் பாராள்
அன்னை பராசக்தி
ஊக்கம் இருந்தால் போதும் என்பாள்
அன்னை பராசக்தி
எங்கும் நிறைந்த ஜோதியாயிருப்பாள்
அன்னை பராசக்தி
ஏகாக்ஷரமாய் எங்குமே நிற்பாள்
அன்னை பராசக்தி
ஐங்கரநாதனை ஆதியில் தந்தாள்
அன்னை பராசக்தி
ஒட்டியாண பீடத்தி லமர்வாள்
அன்னை பராசக்தி

ஓம் என்றாலே ஓடியும் வருவாள்
அன்னை பராசக்தி
ஔவை யெனவே அவனியில் வந்தாள்
அன்னை பராசக்தி
ஓம் ஓம் ஓமென்றாலே
அன்னை பராசக்தி
ஓமென்றாலே ஓடியும் வருவாள்
அன்னை பராசக்தி
ஓம்ஓம் ஓமென்றாலே
அன்னை பராசக்தி
ஓமென்றாலே உருவில்வருவாள்
அன்னை பராசக்தி.

உள்ளம் என்னும் கோவிலிலே
உணர்வென்னும் ஊஞ்சலிலே
மெள்ள மெள்ள ஆடிடுவாய்
மேன்மையெல்லாம் நிறைந்தவளே!
கள்ள மில்லாஉள்ளத்திலே
கனிந்து வரும் தெள்ளமுதே
அள்ளி அணைய வந்திடுவாய்
ஆருயிரே இளங் குமரி!

பாட்டிசைத்துப் பாடிடவே
    பாவலர்கள் பலரிருக்க — தலை
யாட்டி எந்தன் உளறலையே
    கேட்பதென்ன விந்தையடி!

துள்ளி வரும் எழிலுருவே
    தொடர்ந்து வரும் நல்லிசையே
பண்ணிசைத்துப் பாடுகிறேன்
    பாவையே நீ ஆடிடுவாய்!

கொஞ்சி வரும் இளங்குயிலே
    கோல எழில் கோகிலமே
செஞ்சிலம்பு ஒலித்திடவா
    தெய்வ எழில் குமரி அம்மா

செவ்விதழின் மலர்ச் சிரிப்பும்
    சிங்காரத் தளர் நடையும்
தாவி வரும் அருட்குழந்தாய்
    தரணி ஈன்ற கருணையளே!

பால்என என் புன்மொழியே
    பருக வரும் பாலகியே
நாலு மறை தொழ நின்றாய்
    நாயகியே குமரி அம்மா!

எட்டியே ஜாண் உடம்பில்
    எல்லா முன்றன் ஆடலடி
மட்டிலாத இனிமை யுன்னில்
    மயங்கி என்னை இழந்தேவிட்டேன்!

ஹரே ராம ஹரே ராம
    ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
    கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

## நமஸ்காரம்

வேலு மயிலு நினைந்தவர்
தந்துயர் தீர அருள்தர கந்தா நின்னருள் தாராய்
முருகா சரணம் சரணம்!

பணியு மடியார் சிந்தை மெய்ப்
பொருளதாக நவில் சரவண பவா
சரணம் சரணம்!

அடியவ ரிச்சையி லெவை யெவையுற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே
சரணம் சரணம்!

வேண்டிய போதடியார் வேண்டிய போகமது
வேண்ட வெறுதுதவு பெருமாளே
சரணம் சரணம்!

வேண்டுமடியர் புலவர் வேண்டஅரிய பொருளை
வேண்டுமளவி லுதவும் பெருமாளே
சரணம் சரணம்!

சிவமார் திருப்புகழை எனுஞானினிற் புகழ
சிவஞான சித்திதனை யருள்வாயே!
முருகா சரணம் சரணம்!

கலியாண சு புத்திரனாக
குறமாது தனக்கு வினோத
கவிஞரு புயத்தி லுலாவி விளையாடிக்
களிகூரு முனைத் துணைதேடு
மடியேனைச் சுகப்படவே வை
கடனாகு மிதுக்கனமாகு முருகோனே
சரணம் சரணம்!

சஞ்சலமான பைத்தியமாகித் தடுமாறித்
தவியாமல் சஞ்சலத்தின் பிறப்பையும் நாடி
யதுவேரை யறுத்துனை யோதி
தலமீதில் ஒற்றுமையாய்ப் பிழைத்திடவே
பவரோக வைத்திய நாதப் பெருமாளே
சரணம் சரணம்!

சகல துக்க மும்அறச் சகல சற்குணம் வரத்
தரணியிற் புகழ்பெறத் தகைமை பெற்றுனது
பொற்
சரண மெப்பொழுது நட்பொடு நினைத்திட
அருள் தருவாயே
முருகா சரணம் சரணம்!

நினைத்த காரியம் அநுகூலமே புரி பெருமாளே
சரணம் சரணம்!

ஏழைக் கிரங்கும் பெருமாளே சரணம் சரணம்!

ஏழைகள் வியாகுல மிதேதெனை வினவிலுனை
யேவர் புகழ்வார் மறையுமென் சொலாதோ
முருகா சரணம் சரணம்!

குறிஞ்சிவாழும் மறவர்நாயக ஆதிவிநாயக
ரிளைய நாயக காவிரி நாயக
வடிவினாயக ஆனைத னாயக எங்கள் மானின்
மகிழுநாயக தேவர்கள் நாயக
கவுரி நாயகனார் குருநாயக
வடிவதாமலை யாவையு மேவிய தம்பிரானே
சரணம் சரணம்!

சிவத்தின்சாமி மயில்மிசை நடிக்குஞ்சாமி
யெமதுளே
சிறக்குஞ்சாமி சொரூபமி தொளிகாணச்

செழிக்குஞ்சாமி பிறவியை யொழிக்குஞ்சாமி
தெறிக்குஞ்சாமி முனிவர்க ளிடமேவும்
தவத்தின்சாமி புரிபிழை பொறுக்குஞ்சாமி
குடிநிலை
தரிக்குஞ்சாமி யசுரர்கள் பொடியாகச்
சிதைக்குஞ்சாமி யெமைப்பணி விதிக்குஞ்சாமி
[சரவண
தகப்பன்சாமி யெனவருள் பெருமாளே
சரணம் சரணம்!

கலக்குண்டாகு புவிதனி லெனக்குண்டாகு பணி
விடை
கணக்குண்டாதல் திருவுள மறியாதோ
முருகா சரணம் சரணம்!

ஆடிய மயிலினை யொப்புற்று
பீலியு மிலையுமு டுத்திட்டு
ஆரினு மழகுமி கப்பெற்று யவளுளும்

ஆகிய விதண்மிசை யுற்றிட்டு
மானின மருளவி ழித்திட்டு
ஆயுத கவணொரு கைச்சுற்றி விளையாடும்

வேடுவர் சிறுமி யொருத்திக்கு
யான் வழி யடிமையெனச் செப்பி
வீறுள அடியிணை யைப்பற்றிப் பலகாலும்

வேதமு மமரரு மெய்ச் சக்ர
வாளமு மறியவி லைப்பட்டு
மேருவில் மிகவு மெழுத்திட்ட பெருமாளே
சரணம் சரணம்!

அந்தண்மறை வேள்வி காவற்காரா சரணம்!
செந்தமிழ் சொல் பாவின் மாலைக்காரா
சரணம்!

அண்ட ருபகார சேவற்காரா சரணம்! முடி
மேலே

அஞ்சலி செய்வோர்கள் நேயக்காரா சரணம்!
குன்றுருவ ஏவும் வேலைக்காரா சரணம்!
செஞ் சொலடியார்கள் வாரக்காரா சரணம்!
எதிரான

செஞ்சமரை மாயு மாயக்காரா சரணம்!
துங்கரண சூர சூறைக்காரா சரணம்!
செந்திநகர் வாழுமாண்மைக்காரப்
பெருமாளே சரணம்! சரணம்!

அடியேன் முஞ்சர் மனைவாசல் தேடித் தேடி
யுழலாமல்
எனக்கு முந்தைவினையே வராமற் போக
செம்பொன் மயில் மீதி லிப்போது
வருவாயே முருகா சரணம் சரணம்!

வேதமூர்த்தி திருத்தணி வெற்புறை
சோதி கார்த்திகை பெற்ற விளக்கொளியே!
அடியேன் வினைப்பகை யறுத்து, நினைத்ததும்
முடித்து
மனத்துயர் கெடுத்து, அடியேனை வளர்த்
தருள்
கிருபைக் கடலே முருகா சரணம்! சரணம்!

சித்ரக வித்துவ சத்த மிகுத்ததி
ருப்புகழைச் சிறிதடியேனுஞ்
செப்பென வைத்துல கிற்பரவத்தெரி
சித்தவ நுக்ரக மறவேனே
முருகா சரணம் சரணம்!
நீ தந்த பேரருள் கனவிலு நனவிலு மறவேனே
முருகா சரணம் சரணம்!

## வாழ்த்துக்கள்

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க, குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள்சைவநீதி விளங்குகஉலகமெல்லாம்

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியாரெல்லாம்.

## மங்களம்

மங்கள முரைப்பாய் மனமே - மாதவர்க்கு
மங்கள முரைப்பாய் மனமே

பொங்கு மன்புட னன்பர்க்
கருளும் கருணைக் கடல்
பொல்லா அகந்தை போக்கும்
சற்குரு நாதருக்கும் (மங்

தங்கச் சிலம் பொலிக்க
ஷண்முக வடிவுடன்
சங்கரர் மனங்குளிர
உபதேசம் செய்தவர்க்கும் (மங்

ஆதிபரா சக்தி
அம்மை லலிதேஸ்வரி
வேத புராணம் போற்றும்
ஜோதி ஸ்வரூபிக்கும் (மங்

நீலமேக ச்யாமளர்க்கும்
ராதா வல்லவர்க்கும்
நித்தியா னந்த ரூபருக்கு
நானற்ற பாவத்துடன் (மங்

சத்புருஷர் சங்கத்திற்கும்
சர்வஞ்ய ஸ்ரீ மாருதிக்கும்
ஆனந்தம் ஆனந்தம்
அருணகிரி நாதருக்கும் (மங்

## மங்கள ஆரத்தி

ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய வென தினம் பாடிப்பணிந்தோம்
ஜெக மெங்கும் அமைதியைத்தா - ஓம்ஸ்ரீ (ஜெய

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவை எல்லாம் மறைய - அம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெமை - ஓம்ஸ்ரீ (ஜெய

இரண்டுகள் போக மூன்றுகளகல
ஈஸ்வரி பலமருள்வாய் - அம்மா
கரங்குவித்தோமினி காலே விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம்ஸ்ரீ (ஜெய

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் - அம்மா

தேசுடன்வாழ காட்டடி காக்ஷி
தேவியுன் அடைக்கலமே - ஓம்ஸ்ரீ (ஜெய

நமஸ்கார மிருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து - அம்மா
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்துக் கமைதியைத் தா - ஓம்ஸ்ரீ (ஜெய

ஓம் கணபதி ஸாயி ஷண்முகநாதா
ஓம் த்ரிகுணா தீத கிருஷ்ணா
ஓம் ஸ்ரீராம மகாதேவ சம்போ
ஓம் ஜெய ஜெகஜ்ஜெனனீ - ஓம்ஸ்ரீ (ஜெய

## அமைதி வேண்டல்

அசத்தெல்லாம் சத்தாக
அஞ்ஞான இருள் ஞான ஒளியாக
கொடிய அழிவெனும் சக்தி அமுதமாக
அருள்வாய் அவனிக்கெல்லாம்

அமைதி அமைதி அமைதி.

ஓம்தத்ஸத்

---

# ஆத்மஜோதி நிலையத்தில்

### கிடைக்கக் கூடிய

## ஆத்மீக நூல்கள்

| | |
|---|---|
| தெய்வீக வாழ்க்கைச் சங்க மலர் | 1.25 |
| தீங்கனிச் சோலை | 2.50 |
| அறிவுரைக் கதைகள் | .65 |
| இளங்கோவின் கனவு | 2.25 |
| ஆத்மநாதம் | 3.00 |
| கீதாயோகம் | 2.50 |
| பாட்டாளி பாட்டு | 1.50 |
| கந்தரநுபூதி | 25 |
| மார்கழிப் பாடல் | .20 |
| திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| பக்த ராஜ் ஸ்ரீ ஜலராம் மகராஜ்ஜீ | .40 |
| கூட்டு வழிபாடு | .30 |
| திருநீற்றின் பெருமை | .10 |
| சைவ இலக்கியக் கதா மஞ்சரி | 3.00 |
| நாவலர் நாடகம் | 2.00 |
| நித்திய கருமவிதி | .25 |
| கந்தர்சஷ்டி கவசம் | .15 |
| ஆத்மஜோதி மலர் | 2.00 |
| செல்லச்சந்நிதி பாடல் | .25 |
| சமரச ஞானக்கோவை | 5.00 |